ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

United Nations Educational, Scientific and Cultural Organization
New Delhi Office
Cluster Office for Bangladesh, Bhutan, India, Maldives, Nepal and Sri Lanka

இலங்கையில்

# பெண் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கான

மாதிரி வழிகாட்டல்

May 2021



# வழிகாட்டல் உருவானதன் பின்னணி

பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறைசார் பெண்களுக்கு எதிரான இணையவழி (online) மற்றும் அதற்கு வெளியிலான (offline) தாக்குதல்கள் தொடர்பான நிகழ்வுகளின் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்பை அவதானிக்க முடிகிறது. இது அவர்களது பாதுகாப்பில் கடுமையான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. துன்புறுத்தல், களங்கப்படுத்துதல், பாலியல்சார் வெறுப்பு பேச்சு, ஸ்டீரியோடைப்பிங், ஆத்திரமூட்டுதல், கண்காணித்தல், மிரட்டல்கள், உடல் ரீதியான தாக்குதல், கற்பழிப்பு மற்றும் கொலை என இந்த தாக்குதல்களை வரிசைப்படுத்தலாம். பாதிக்கப்பட்டவர்களாக இருக்கும் அதேவேளை அவர்கள் வெளித்தோற்றத்தில் ஊடகவியலாளர்களாக தமது பணியை ஆற்றுகின்றனர்.

அவர்கள் தங்களது வேலைத்தளத்தின் உள்ளேயும் பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். பெண் ஊடகவியலாளர்கள் தாம் பணியாற்ற உகந்த சூழலாக இருக்க வேண்டிய தங்களது சொந்த பணியிடங்கள் அல்லது செய்தி அறைகளிலேயே பொதுவாக அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறார்கள். இது பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் பணிகளை உடல் மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஒரு சூழ்நிலையில் முன்னெடுக்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

பெண் ஊடகவியலாளர்களுக்கு உகந்த பணிச்சூழலை உருவாக்குவதற்கு ஊடக நிறுவனங்களுக்கு சில முக்கிய பரிந்துரைகள் வருமாறு.



# முன்னுரை

பெண் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை ஊடக நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் அமுல்படுத்துவதற்கான ஒரு மாதிரி வழிகாட்டல் இதுவாகும். இந்த வழிகாட்டல் பெண் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு அம்சங்களில் கவனம் செலுத்துகிறது.

இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம், ஊடகத் துறையில் நிலவும் தற்போதைய சவால்களுடன் கவனிக்கப்படாமல் இருக்கக்கூடிய அபாயங்களைத் தணிப்பதற்கும் குறைப்பதற்கும் நிறுவனத்தினால் பாதுகாப்பான சூழலை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழிகாட்டல் ஒரு பெண் ஊடகவியலாளருக்கு சவால் விடும் அனைத்து ஆபத்துகளையும் முற்றிலுமாக ஒழிப்பதற்கு உத்தரவாதம் அளிக்காது, ஆனால் சவால்களை எதிர்கொள்ள ஒரு நேர்மறையான வழிகாட்டலை வழங்குகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

# அமுல்படுத்த பரிந்துரைக்கப்படுபவர்க

ஓர் ஊடக அமைப்பு இந்த வழிகாட்டலை அமுல்படுத்த முனைந்தால் பொருத்தமான வளங்கள் கிடைக்கும் தன்மை மற்றும் ஊடகவியலாளர்களின் சவால்களைக் கையாள்வதில் நிபுணத்துவத்தை பூர்த்தி செய்தல் என்பதை உறுதிப்படுத்த செய்தி அறை தலைமை அதிகாரி மற்றும் மனிதவளப் பிரிவு தலைமை அதிகாரி ஆகியோரால் கூட்டாக மேற்கொள்ளப்படுவது சிறந்தது என பரிந்துரைக்கப்படுகிறது.

இந்த வழிகாட்டுதல்கள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் நிர்வாகப்பிரிவு, ஆசிரியர் பீடம், ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவ நிபுணர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்டன.

# நிறுவன பாதுகாப்பு குழு

- தொடர்ந்து இடம்பெறும் அபாயங்களை முறையாக மதிப்பாய்வு செய்ய ஒரு நிறுவன பாதுகாப்பு குழுவை ஸ்தாபியுங்கள்.

- இந்த குழுவின் வகிபங்கு, நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளிலுமுள்ள (உதாரணமாக: நிதி, ஏற்பாடுகள், மனித வளம், தொழிற்பாடுகள் போன்றவை) ஆபத்துக்களை அடையாளம் காண்பதும் குறிப்பாக இதில் பெண்கள் தொடர்பான அபாயங்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதாகும்.

- நிறுவன இடர் முகாமைத்துவ அதிகாரி அல்லது அவர் இல்லாவிடின், இந்த பொறுப்பைக் கொண்ட ஒரு தொழில்சார்நிபுணர் தலைமையில் இந்த குழுவில் முக்கிய திணைக்களங்களுடன் தொடர்புடைய தலைவர்கள் உள்ளடங்க வேண்டும்.

- அவசர காலங்களில் முக்கிய தகவல்கள் பரிமாறப்படுவதை உறுதிசெய்து, நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் அடையும் வகையில் அவசர தொடர்பாடல் திட்டம்/கட்டமைப்பை நிறுவுதல்.



# உதவிப் பொறிமுறைகள்

- ஊடகவியலாளர்களால் எடுத்துச் செல்லப்படக் கூடிய, அவசரத்தின் போது தொடர்பு கொள்ள வேண்டிய பட்டியல் மற்றும் முக்கிய அமைப்புகளின் தொடர்பு இலக்கங்கள் அடங்கிய கையடக்க வழிகாட்டியை உருவாக்குங்கள். அவை முறைப்படி புதுப்பிக்கப்படலாம்.

- வழக்கமான பணிகளை முன்னெடுக்கும்போது சட்ட ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குவதற்கான ஒரு பிரத்தியேக அல்லது நிறுவனத்தினுள்ளேயான வழிமுறையை உறுதிப்படுத்தவும்.

- ஒவ்வொரு ஊடகவியலாளருக்கும் வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளடக்கிய விரிவான கையேட்டை கிடைக்கச் செய்யுங்கள். இந்த கையேட்டில் பெண் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் அபாயங்கள் மற்றும் அவற்றைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் என்பன உள்ளடக்கப்பட வேண்டும். இந்த கையேட்டை ஒரு முறையான அடிப்படையில் மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க வேண்டும்.

- நிறுவனத்திற்குள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்த முறைப்பாடுகளைத் தீர்க்க ஒரு குறை தீர்க்கும் நடைமுறை மற்றும் முறைகேடுகளை அம்பலப்படுத்துவதற்கான கொள்கை (றாளைவடநடிடழறநச ிழடைஉல) இருப்பதை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும். அனைத்து தகவல்களும் அதன் உணர்திறன்மிக்க தன்மை காரணமாக இரகசியமாக பேணப்படுவதுடன் இந்த நடைமுறைகளை செயல்படுத்துபவர்களால் நியாயமற்ற எதிர்வினைகள் நேராது என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

- ஊடகவியலாளர்கள் தங்கள் பணிகளை முன்னெடுக்கும்போது எதிர்கொள்ளும் அபாயங்களைப் புரிந்துகொள்வதற்கும் வருடாந்த மதிப்பாய்வை நடத்துங்கள். இதற்கமைய இடர் குறைப்பு உத்திகளைத் தயாரிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் முடியும்.

# பயிற்சி

- புதிய ஊழியர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சியில் பாலின உணர்திறன் அமர்வுகளை உள்ளடக்குதல்

- ஊடகவியலாளர்கள் தங்கள் கடமையை முன்னெடுக்கும்போது அவர்களது பாதுகாப்பை ஆதரிக்கின்ற, உறுதி செய்கின்ற சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகள், உடல்சார் பாதுகாப்பு, இணைய/டிஜிட்டல் பாதுகாப்பு, இடர் மதிப்பீடு, முதலுதவி போன்றவை குறித்து ஊடகவியலாளர்களுக்கு வருடாந்தம் பாதுகாப்பு பயிற்சி வழங்குதல்

- நிறுவனத்தின் பல்வேறு நிலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு (சிரேஷ்ட முகாமைத்துவம், நடுத்தர முகாமைத்துவம், செய்தி அறைகள், ஆதரவு குழுக்கள் போன்றவை) வருடாந்த பாலின உணர்திறன் பயிற்சிகள் / அமர்வுகள் / கலந்துரையாடல்களை நடத்துதல்



# உடல்சார் பாதுகாப்பு

- பெண் ஊடகவியலாளர்கள் ஒவ்வொரு பணிக்குத் தயாராகும்போதும் பயணத்திட்டமிடல் அவசியமாகும். ஓர் அறிக்கையிடலுக்காக புதிய சூழலுக்குப் பயணிக்க வேண்டுமாயின், பணியை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து தீர்மானிக்க குறித்த இடம், மொழி, கலாசாரம் மற்றும் வழக்காறுகள் குறித்து முன்கூட்டியே ஆய்வு செய்வது அவசியம்.

- அதிக ஆபத்து நிறைந்த சூழல்களுக்கு அனுப்புவதற்கு முன்பு இடர் மதிப்பீடு செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும் (உதாரணமாக: ஆயுத மோதல் நிலைமை, கோவிட் -19 போன்ற தொற்று சூழ்நிலைகள், வன்முறைச் செயல்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள்)

- ஊடகவியலாளர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களைக் குறிக்கும் செல்லுபடியாகும் அடையாள அட்டைகளை எல்லா நேரங்களிலும் அவர்களுடன் எடுத்துச் செல்வதை உறுதிசெய்க.

- பாதுகாப்பான தங்குமிடம், போக்குவரத்து மற்றும் அறிக்கையிடலுக்குச் செல்லும் போது பயணிக்கும் வழிகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு ஆலோசனை வழங்கக்கூடிய நிறுவனத்தின் ∴ செய்தி அறையின் பாதுகாப்பு அதிகாரியை நியமியுங்கள்.

- போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டு கொள்கைகளில் பணிகள் மற்றும் பிந்திய வேலை நேரங்களில் பயணம் செய்யும் போது பெண் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.



# டிஜிடல் பாதுகாப்பு

- இணையத்தில் முன்னிலையாகும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் இணையவழி அச்சுறுத்தல்களைச் சமாளிக்க கண்காணிப்பு மற்றும் முறைப்பாடுகளைக் கையாளும் ஒரு பொறிமுறையை நிறுவுக. அடையாளம் காணப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்புடைய நிறுவனங்களான ஊநுசுவு, இணைய குற்றப் பிரிவுக்கு முறையிடப்பட வேண்டும். அத்துடன் இதுபோன்ற அச்சுறுத்தல்கள் தொடர்வதைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட வேண்டும்.

- நிறுவனத்திலிருந்து வெளியேறும் மற்றும் உள்வரும் தொடர்பாடல்களைப் பாதுகாக்க புதுப்பிக்கப்பட்ட மற்றும் புதிய கணினி அரண் (firewall) அமைப்பு இருக்க வேண்டும்.

- ஒவ்வொரு பயனருக்கும் தனித்துவமான பயனர்பெயர்கள் மற்றும் கடவுச்சொற்கள் உலகளாவிய தரத்தின்படி ஒதுக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்வதுடன் ஒரு மத்திய அணுகல் கட்டுப்பாட்டு பொறிமுறை மூலம் மாதாந்தம் அல்லது தேவையின் அடிப்படையில் அவை மாற்றப்பட வேண்டும்.

- ஒவ்வொரு டிஜிட்டல் சாதனமும் இணைய பாதுகாப்பு மற்றும் வைரஸ் பாதுகாப்பை கொண்டிருக்க வேண்டும்.

- அனைத்து டிஜிட்டல் சாதனங்களிலும் தரவை சேமிப்பதில் குறியாக்க தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

- சமூக ஊடக பயன்பாடு மற்றும் ஈடுபாடு குறித்த வழிகாட்டல்களை வழங்குதல் / கொள்கைகளை உருவாக்குதல்.

- தொடர்புடைய டிஜிட்டல் சாதனங்களில் வழக்கமான பாதுகாப்பு புதுப்பிப்புகள் (ளநஉரசவைல ரினயவநள) மற்றும் திட்டுகள் (patches) பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த சட்டபூர்வ உண்மையான மென்பொருளை நிறுவவும்.

- பணி நோக்கங்களுக்காக நிறுவன மின்னஞ்சல் கணக்குகளை உருவாக்கவும்.

# உளவியல் பாதுகாப்பு

- அதிர்ச்சிகரமான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்தவர்களுக்கு மனிதவள பிரிவின் மூலம் உளவியல் மற்றும் உணர்வு ரீதியான ஆதரவினை வழங்கக் கூடிய ஒரு தனிநபர் அல்லது ஒரு சேவை கொண்ட பணியாளர் பராமரிப்பு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

- பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் அன்றாட வேலைகளில் எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ளும் நோக்கில் மனிதவளப் பிரிவு மற்றும் செய்தி அறைகளின் தலைவர்கள் மையக் குழு கலந்துரையாடல்களை நடாத்த வேண்டும்.

# பின்னிணைப்பு I

## (1). அரசியலமைப்பு பாதுகாப்புகள்

இலங்கையின் அரசியலமைப்பு சகல இலங்கை பிரஜைகளினதும் உரிமைகளை அவர்களது பாலினத்தைப் பொருட்படுத்தாமல் உறுதி செய்யும் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பு அனைத்து வகையான மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடாத்துதல் மற்றும் தண்டனை, கருத்துச் சுதந்திரம், தகவல்களை அணுகுதல் மற்றும் அனைத்து வகையான பாகுபாடுகளுக்கும் எதிராக பாதுகாப்பை உறுதி செய்கிறது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் தற்போதைய இணைப்பு வருமாறு :

https://www.parliament.lk/files/pdf/constitution-ta.pdf

### தகவல் அறியும் உரிமை

தகவல் அறியும் உரிமை (RTI) 2016 இலிருந்து அரசியலமைப்பின் உறுப்புரை 14 A இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2017 இல் நடைமுறைக்கு வந்ததுடன் இது பொதுச்சேவை அதிகாரிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறை மற்றும் பொறிமுறைகளை வகுக்கிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான இணைப்பு : https://www.rti.gov.lk/images/resources/RTI_ Act_Sri_Lanka_E.pdf

## (2). தண்டனைச் சட்டம் மற்றும் கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான பிற சட்டங்கள்

இலங்கையின் தண்டனைச் சட்டம் பெண்களுக்கு எதிரான கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறைகளை தடை செய்கிறது. கற்பழிப்பு, கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விதிகள் இதில் உள்ளடங்கும்.

ஆதாரக் கட்டளை மற்றும் குற்றவியல் நடைமுறைக் கோவை ஆகியன கற்பழிப்பு குற்றத்தை விசாரித்து தீர்ப்பளிப்பதற்கான நடைமுறை மற்றும் ஆதார விதிகளை வகுக்கின்றன. கற்பழிப்பு குற்றம் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 363 இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பொருந்தும்.

ஒரு பெண் இணைய பாலியல் துன்புறுத்தல் அல்லது வன்முறையை எதிர்கொண்டால், தண்டனைச் சட்டம் அவருக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய சில விதிகளைக் கொண்டுள்ளது. இதில் பிரிவு 345, 372 மற்றும் 483 ஆகியவை அடங்கும்.

தண்டனைச் சட்டக் கோவையை அணுகுவதற்கான இணைப்பு வருமாறு :https://www.lawnet.gov.lk/penal-code-consolidated-2/

பாதிக்கப்பட்டவர் குறிப்பாக இணைய பாலியல் வன்முறை தொடர்பான சந்தர்ப்பங்களில் நம்பிக்கை வைக்கக் கூடிய பிற சட்டங்களும் உள்ளன. இவற்றில் ஆபாச வெளியீடுகள் கட்டளை, கணினி குற்றங்கள் சட்டம் மற்றும் கொடுப்பனவு சாதனங்கள் மோசடி சட்டம் ஆகியவை அடங்கும்.

ஆபாச வெளியீடுகள் கட்டளை - http://www.mediareform.lk/wp-content/uploads/2020/03/164-Obscene-Publications-Ordinance-No.04-of-1927.pdf

கணினி குற்றங்கள் சட்டம் - https://www.srilankalaw.lk/?id=239&lang=en

கட்டண சாதனங்கள் மோசடி சட்டம் - https://www.lawnet.gov.lk/payment-devices-frauds-2/#:~:text=AN%20ACT%20TO%20PREVENT%20THE,INVESTIGATION%2C%20PROSECUTION%20AND%20PUNISHMENT%20OF

## (3). தொழிலாளர் சட்டத்தின் சில முக்கிய அம்சங்கள்

இலங்கையின் தொழிலாளர் சட்டம் ஊழியர்களின் வேலை நேரம், ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம், ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றைப் பெறுவதற்கான அவர்களது உரிமை என்பவற்றை உள்ளடக்குகிறது.

தொழிலாளர் சட்டத்தின் சில விதிகளை கீழே உள்ள இணைப்புகளைப் பயன்படுத்தி அணுகலாம்:

கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் - https://www.srilankalaw.lk/Volume-VII/shop-and-office-employees-regulation-of-employment-and-remuneration-act.html

தொழிற்சாலைகள் கட்டளை - https://www.ilo.org/dyn/travail/docs/1684/1_factories_ordinance_i.pdf

தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பள சட்டம் - https://www.srilankalaw.lk/YearWisePdf/2016/03-2016_E.pdf

மகப்பேறு நன்மைகள் கட்டளை - http://www.ilo.org/dyn/natlex/natlex4.detail?p_lang=en&p_isn=27182

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மகப்பேறு பாதுகாப்பு மாநாடு - https://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB%20:12100:0::NO::P12100_ILO_CODE:C103

தொழிலாளர்களை வேலைவாய்ப்பிலிருந்து நிறுத்துதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் - http://labourdept.gov.lk/images/PDF_upload/chapter01/6_termination_of_employment_of_workmen.pdf

## (4). ஏனைய அதிகாரிகள்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதை ஊக்குவிப்பதும் கண்காணிப்பதும் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுடன் இலங்கை அரசு இணங்கிச் செல்வதை உறுதி செய்வதும் ஆகும்.

அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது நிகழலாம் என எதிர்பார்க்கப்படும் அடிப்படை உரிமை மீறல்கள் குறித்த எந்தவொரு முறைப்பாடுகளையும் விசாரிப்பதற்கும் இழப்பீடு உள்ளிட்ட பொருத்தமான நஷ்டயீடுகளை வழங்குவதற்கும், சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒரு நபர் இருக்கும் எந்த இடத்தையும் ஆய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் தடையற்ற அணுகல் வழங்குவதற்கும் ஆணைக்குழுவிற்கு ஒரு பரந்த ஆணை மற்றும் அதிகாரங்கள் உள்ளன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்திற்கான இணைப்பு https://www.hrcsl.lk/about/hrcsl-act/

info@slpi.lk

+94 115 353 635

+94 115 335 500

www.slpi.lk

Sri Lanka Press Institute,
96, Kirula Road, Colombo 05.

@SriLankaPressInstitute

slpi_media

SLPI